தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – ஐப்பசி 25

2010 நவம்பர் 11, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை *9–30* மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் *21*, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

விற்பனைக் கூடம்

***104471-திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் மஞ்சளுக்கு வணிக வளாகம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

11-303—3a

[2010 நவம்பர் 11

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை தங்கள் அனுமதியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டி செல்லிபாளையம் கிராமத்தில் 7.34 ஏக்கர் நிலத்தினை ஈரோடு விற்பனைக் குழுவிற்கு நில உரிமை மாற்றம் செய்து 9-11-2010 நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 579-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க 14-11-2010 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களகரமான மஞ்சளுக்கு ஈரோட்டிலே விற்பனை வளாகம் அமைக்கப்படும் என்கிற நல்ல செய்தியைத் தந்திருக்கிற தலைவர் கலைஞர் பெருமகனாருக்கு, நம் அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது எத்தனை கோடியிலே தொடங்கப்படவிருக்கிறது? எப்போது துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டப்போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன். கடந்த ஆண்டு ரூ.10 கோடியை மானியமாக அரசு ஒதுக்கியிருக்கிறது. அப்படி ஒதுக்கிய அந்தத் தொகை நிலுவையில் இருக்கிறது. அந்தத் தொகையையும் மஞ்சள் வணிக வளாகத்தின் வளர்ச்சிக்காக குடோன் போன்ற வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்திக்கொள்ள இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடையிலேயே மாண்புமிகு துணை முதலமைச்சர் 14-11-2010 அன்று அடிக்கல் நாட்ட இருக்கிறார் என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியதைப்போல

2010 நவம்பர் 11]

ரூ.11 கோடியில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முன்பு தேர்வு செய்யப்பட்ட நசியனூர் பகுதியில் பிரச்சினை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இப்போது இந்தப் புதிய இடத்தில் வணிக வளாகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருவாய்த் துறைமூலம் நில உரிமை மாற்றம் செய்து வணிக வளாகம் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுவிட்டது. அது ரூ.11 கோடியாக இருக்கலாம் அல்லது இன்னும் 2 கோடி ரூபாய் சேர்ந்தாலும், அதை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் நிதியிலிருந்துதான் கட்டுகிறோம். விவசாயிகளினுடைய நன்மை கருதி சிறப்பான முறையில் இந்த மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் வணிகத்திற்குப் பெயர் பெற்ற ஊர் ஈரோடு. இதுதான் இந்தியாவிலேயே முதல் மஞ்சள் மார்க்கெட். ஈரோட்டிலேதான் அதிகமாக மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தபட்சம் 20 இலட்சம் மூட்டைகள் ஓர் ஆண்டுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட மஞ்சள் வணிக வளாகத்திற்கு குடோன் வசதி தேவைப்படுகிறது. குடோன் இல்லாமல் விவசாயிகள் அங்கே மஞ்சளை ஸ்டாக் வைக்க வசதி இல்லாமல் குறைந்த விலைக்கு விற்கிற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதிக விலைக்கு, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலைக்கு விற்க வேண்டும் என்று சொன்னால் குடோன் வசதி தேவைப்படுகிறது. உலர்களங்கள் தேவைப்படுகின்றன. அதைப்போல மிகப் பெரிய அளவில் Tender Hall தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் கடந்த ஆண்டு அரசின் சார்பிலே வில்லரசம்பட்டியில் இடம் பார்க்கப்பட்டபோது, அரசு நிதி ரூ.10 கோடி ஒதுக்கியது. அரசு ஒதுக்கிய 10 கோடி ரூபாய் நிதி இருக்கிற காரணத்தினாலே, தற்போது நீங்கள் செலவு செய்யப் போகிற ரூ.11 கோடி ரூபாயும் விற்பனை குழு வருமானத்தில் செய்யப்படுவதாகும். ஆகவே, விற்பனைக் கூடத்திற்கு 50 கோடி ரூபாய் நிதி இருந்தால்கூட கடந்த ஆண்டு மட்டும் ரூ.9 கோடி அரசுக்கு இலாபம் ஈட்டித் தந்திருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு ரூ.10 கோடி கடந்த ஆண்டு ஒதுக்கியதை முழுவதுமாகச் செலவு செய்து, அங்கே குறைந்தபட்சம் 20 இலட்சம்

மூட்டைகளை அடுக்குவதற்குத் தேவையான குடோன் வசதிகளைச் செய்தால், இந்த மஞ்சள் வணிக வளாகம் எல்லா விவசாயிகளுக்கும் பயன்படக்கூடிய அளவிலே இருக்கும் என்ற செய்தியைச் சொல்லிக்கொள்கிறேன். அதோடு நேற்றைக்கு நான் தங்களிடம் வினாவை எழுப்பியதைப்போல, சென்னை போன்ற பெரு நகரங்களிலே மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதுபோல, காய்கறிக்கு மெகா மார்க்கெட் சென்னையில் அமைக்கின்ற திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதையும் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடோன் வசதி, தரம் பிரிப்பது, ஏலம் விடுவது போன்ற எல்லா வசதிகளும் அடங்கிய வகையிலேதான் அந்த மஞ்சள் வணிக வளாகம் அமைய இருக்கின்றது. அது எத்தனை கோடி என்பது முக்கியமல்ல. மஞ்சள் அந்தப் பகுதிக்கு எவ்வளவு வருமோ அந்த அளவுக்கு எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய வகையிலேதான் அந்த வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். மஞ்சளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை என்ற காலம் மாறி இன்று மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்ற காரணத்தினாலே மஞ்சள் அதிக அளவிலே பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஈரோடு, சேலம், நாமக்கல் போன்ற பல்வேறு மாவட்டங்களில் அதிகம் பயிரிடப்படுவதனாலே, அந்த மஞ்சள் வணிக வளாகம் இன்னும் எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யக்கூடிய அளவில் பெரிய அளவில் அமைக்க வேண்டுமென்கிற கருத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதேபோல் சேலம் மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர் பகுதியில் மிளகாய் விளைச்சல் அதிகம் இருக்கிறது. பருத்தி விளைகிறது.

2010 நவம்பர் 11]

அவர்களுக்கு விற்பனைக்கூடம் இல்லாத காரணத்தினாலே எங்கெங்கோ எடுத்துச் சென்று கட்டுப்படியாகும் விலை கிடைக்காது இருக்கின்ற காரணத்தினாலே, கொளத்தூர் வட்டாரத்தில் மிளகாய், பருத்திக்கும், அதைப்போல நங்கவள்ளி, கோனூர், மேச்சேரி வட்டாரங்களிலே விளையக்கூடிய பருத்தி மற்றும் மஞ்சள் விற்பனைக்கான ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அல்லது வணிக வளாகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டாயம் நிறைவேற்றுவார், அவர் எல்லாம் அறிந்தவர் என்ற அடிப்படையிலே பேரவைத் தலைவர் வாயிலாக இதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த வளாகம் அமைப்பதற்கு 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். இப்பொழுது வருவாய்த் துறையிடமிருந்து பெறப்பட்டிருக்கின்ற இந்த 7 ஏக்கர் நிலத்திற்குப் பக்கத்தில் வருவாய்த் துறையின் 70 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதையும் கொடுப்பதாக வருவாய்த் துறை ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் இப்பொழுது அமைய இருக்கின்ற அந்த மஞ்சள் வணிக வளாகம் 100 ஏக்கர் பரப்பிலே அமையும். முதல் கட்டமாக, 7 ஏக்கர் நிலத்திலே இந்தப் பணி தொடங்க இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதைப்போல, அவர் குறிப்பிட்ட கொளத்தூர் பகுதி, கோனூர் பகுதி, மேட்டூர் பகுதிகளில் மஞ்சளும் விளைகிறது, பருத்தியும் விளைகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் தனியாக ஒரு வணிக வளாகம் அமைக்க முடியுமா அல்லது ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இருந்தால் போதுமா என்பதை ஆய்வு செய்து, அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் சின்னமனூரில் வேளாண்மை

ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வாழைக்காய்க்கான சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்னும் பணிகள் துவங்கப்படவில்லை. சின்னமனூர் பகுதி, வாழைக்காய் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்ற பகுதி. நல்ல விலை கிடைக்காத காலங்களில் அவற்றைச் சேமிப்பதற்கு இயலாததால் அந்த வாழைகள் சேதாரம் அடைகின்றன. ஆகவே, அந்தப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூரில் வாழைக்காய் பழம் பழுக்க வைப்பதற்கான கூடம் ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பொழுது தனியாரே அதற்கு முன்வந்து, வாழைப்பழம் கிரேடு செய்கின்ற அந்த முறையைப் பின்பற்றி வருகின்றார்கள். ஆகவே, அரசின் சார்பில் தனியாக அமைக்க வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவில்லை. இருந்தாலும், அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் வாழைப்பழத்தை கிரேடு செய்து அதைப் பக்குவப்படுத்தி தனியாரிடம் நல்ல விலைக்குக் கொண்டுபோய் விற்பதற்கான வசதிகளை அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கட்டட வசதி

***121206-திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?